தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2039, ஐப்பசி 26

2008 நவம்பர் 11, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9—30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு."

மிக்க உறுதியுடன் காக்கப்பட வேண்டியது அடக்கமாகும். அடக்கத்தைவிட ஆக்கம் தரக்கூடியது வேறொன்றும் இல்லை.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

1—

மென்பொருள் ஏற்றுமதி

***15005—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் மென்பொருள் ஏற்றுமதியை ஊக்குவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 நவம்பர் 11

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோவை நகரத்தை மேம்படுத்தும்விதமாக கோயம்புத்தூர் மாவட்டம், விளாங்குறிச்சி கிராமம், மருத்துவக் கல்லூரி வளாகத்தில் முதற்கட்டமாக 29.08 ஏக்கர் நிலமும், இரண்டாம் கட்டமாக 32.51 ஏக்கர் நிலமும் ELCOT நிறுவனத்தின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்திற்கு சிறப்புப் பொருளாதார மண்டலமாகச் செயல்படுவதற்கான அனுமதி இந்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. அரசாணை எண் 49, தொழில் துறை, நாள் 21—2—2007—ன்படி கோயம்புத்தூரில் ELCOT, TIDCO, இந்திய தகவல் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் TIDEL Park சென்னை ஆகிய நிறுவனங்களின் கூட்டு முயற்சியால் TIDEL Park அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

கோவை TIDEL பூங்கா அமைக்க 24—2—2007 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இந்தப் பூங்கா அமைக்கும் பணி டிசம்பர் 2009—க்குள் முடிவடைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நகரில் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களை அமைக்க, திருவாளர்கள் Wipro நிறுவனத்திற்கு 10 ஏக்கர் நிலமும், திருவாளர்கள் TCS நிறுவனத்திற்கு 5 ஏக்கர் நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கொண்டு சில நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள இடத்தில் சிறப்புப் பொருளாதார மண்டல விதிகளுக்கு உட்பட்டு, தகவல் தொழில்நுட்பவியல் கட்டடங்கள் தவிர, குடியிருப்பு மற்றும் சமூக வசதிகள் அடங்கிய ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப வளாகம் அமைப்பதற்கு ELCOT நிறுவனத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் பயனாக, இப்பகுதியில் உள்ள தகவல் தொழில்நுட்பவியல் வல்லுநர்களுக்கு மிகச் சிறந்த அளவில் வேலைவாய்ப்பு உருவாவதோடு மென்பொருள் ஏற்றுமதியும் அதிகரிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் ஐயா அவர்களுடைய பதில் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. அங்கே பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இதைப்போலவே தமிழ்நாட்டில் புதிய தொழிற்சாலைகள்